# இலங்கை மலையகத் தமிழர்கள்

-'தேனூரன்'-

037

மக்கள் மறுவாழ்வு

வெளியீடு

விலை 50 காசுகள்

# இலங்கை மலையகத் தமிழர்கள்

'தாயகம் திரும்புவோர்' என்கிற அழகான வார்த்தையில் அழைக்க அகதிகளாக இலங்கையிலிருந்து திரும்பிக் கொண்டிருக்கிறார்களே அவர்கள் தான் இலங்கை மலையகத் தமிழர்கள்.

இவர்கள் யார்?

19-ம் நூற்றாண்டில், மேற்கத்திய 'காலவித்துவம்' பெருந்தோட்டங்கள், சுரங்கங்கள் மூலம் தனது பொருளாதாரத்தை உயர்ந்த மூன்றாவது உலக நாடுகளின் பல பகுதிகளில் உருவாக்கிய கோடிக்கணக்கான தொழிலாளர்களில் இவர்களும் ஒரு பகுதியினர்.

## தென்னிந்தியத் தமிழக கூலிகள்

1815-ல் 'கண்டி ராச்சியம்' கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து இலங்கைத் தீவு முழுவதும் ஆங்கிலேயர் வசமானது. இத்தீவின் மலைப்பிரதேசமும், செறிந்த காடுகளும் செல்வத்தை அள்ளி அளிக்கக்கூடிய தங்கச்சுரங்களாக இருந்ததால், காப்பித் தோட்டங்களை உருவாக்கத் தயாரானார்கள்.

மிகுந்தவருவாயை அளிக்கக்கூடிய இத்தொழிலுக்கு சிக்கனமானதும், சளையாத சக்தி வாய்ந்ததுமான உழைப்பு சக்திக்கு தொழிலாளர்கள் தேவைப்பட்டனர்.

இதற்குச் சீனர்களையோ நீக்ரோக்களையோ கொண்டு வரத் திட்டம் போட்டனர். ஆனாலும் அது சாத்தியக்கூறாக அமையவில்லை என்பதால் அத்திட்டத்தைக் கைவிட்டார்கள், அதைத்தொடர்ந்து அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டவர்கள் தான் தென்னிந்திய 'தமிழ்

கூலிகள்.' குறைந்த கூலிக்கும், அயராத உழைப்புக்கும் தகுந்தவர்கள் என்று மலைத்தோட்டங்களுக்கு (பிளான்டேஷன்ஸ்) அழைக்கப்பட்டார்கள்.

இலங்கைக்கு மட்டுமல்ல; பர்மாவுக்கும், மலேசியாவுக்கும், ஆப்பிரிக்காவுக்கும், பிஜீத்தீவுகள் மொரிஷியஸ் தீவுகளுக்குகெல்லாம் அழைத்துச் செல்லப்பட்டார்கள்-முதல் காப்பித் தோட்டங்களுக்கும், பின் தேயிலை, ரப்பர், கரும்புத் தோட்டங்களுக்கும் அழைத்துக் செல்லப்பட்டு உழைக்கும் சக்தியாகப் பயன் படுத்தப்பட்டார்கள்.

வெள்ளையரின் அழைப்பை ஏற்று, கடல் கடந்து செல்லும் அளவிற்குத் தமிழ்நாட்டின் வாழ்க்கைத்தரம் மிக மோசமாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தில் தாழ்ந்த வாழ்வு

வரட்சியின் காரணமாகவும், நீர்ப்பாசன வசதிகள் ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியில் சீர்குலைந்து போயிருந்தாலும் விவசாயம் செய்ய முடியவில்லை. அதனால் கிராமப்புறத்தின் வறுமை தலைவிரித்தாடியது.

பிரிட்டனில் ஏற்பட்ட நவீன தொழிற்புரட்சியினால், அங்கு தயாரான துணிமணிகள் இதர தொழில்களுக்கு தேவையான மூலப் பொருட்கள் அங்கிருந்து கொண்டு வரப்பட்டது. அதனால் கிராமப்புறத்து மக்கள் செய்து வந்த சிறு தொழில்கள் அனைத்துமே பாதிப்புக்குள்ளாயின. இன்னும் நாளுக்கு நாள் அதிகரித்து வந்த நிலவரி போன்றவைகளும், சமூகத்தில் நிலவிய சாதியக் கொடுமைகள், கெடுபிடிகள் எல்லாம் கடல் கடந்து செல்ல வெள்ளை முதலாளிகள் அன்னிய சீமைகளுக்கு 'ஆள் கூட்டி' செல்ல சாதகமாக அமைந்தன.

# பிழைப்புக்கு வழி தேடி

இலங்கைக்கு 1817-லிருந்தே கொஞ்சம் கொஞ்சமாக, பின் ஆயிரமாயிரமாக செல்லத் தலைப்பட்டார்கள் 1843-50 ஆண்டுகளில் 47,028 பேர் இலங்கையில் குடியேறினர்; அடுத்த 50 ஆண்டுகளில் 4,07,780 பேர் இலங்கையில் குடியேறினர். அடுத்த 50 ஆண்டுகளில் 3,88,638 பேர் சென்றனர், ஆயினும் காப்பிச் செய்கையில் வருடத்தில் குறிப்பிட்ட காலத்திற்கேவேலை இருப்பதால் 'தவணை முறையில்' வந்தும் போயும் வேலை செய்ததாலும், வேலை வாய்ப்பின்மை ஏற்பட்டமையாலும் குடிசனத் தொகை அதிகரிப்பை கட்டுப்படுத்த எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளால் மூன்றில் ஒரு பங்கினர் இந்தியா திரும்பியும் விட்டனர்.

அது மட்டுமல்ல; அட்டைக் கடியாலும், நீண்ட நெடும்பயணத்தாலும், கடும்குளிர்போன்ற பழக்கபடாத தட்ப வெப்ப நிலையாலும் உணவு முறையாலும் கடும் உழைப்பினாலும் அதனால் ஏற்பட்ட மலேரியா, விஷக் காய்ச்சல் போன்ற நோயினாலும் ஆயிரக்கணக்கானவர்கள் மாண்டு மடிந்தார்கள். ஒரு புள்ளி விபரப்படி 1841 –1844க்குமிடையில் 77, 000 பேர் இறந்து போனார்கள் என்பது குறிப்பிடத் தக்கது

இந்தியாவிலிருந்து வரும் போது, நடந்த வந்த மலைநாட்டின் ஒற்றையடிப்பதை மாண்டு மடிந்து மக்கிப் போன இவர்களது எலும்புகளால் வெண்மை பூத்துப் போயிருந்தது' என்று ஆங்கில பயணி ஒருவர் எழுதியுள்ள வார்த்தையில் இருந்து இவர்கள் பட்ட கொடுமை எத்துணை தன்மை வாய்ந்தது என்பது புரியும்.

## கங்காணிகள் ஆட்சி

உலகத் தொழிலாளரோடு ஒப்பிடுகையில் இவர்களின் வாழ்க்கைத் தரம் பன்மடங்கு மட்டமாகவே இருக்கிறது. மிகக் கேவலமானது. அன்றுதொட்டு இன்றுவரை கொத்தடிமைகளைப்போலவே வாழ்ந்து வருகிறார்கள். ஆரம்பத்தில் இவர்களுக்கும் தோட்ட நிர்வாகத்திற்கும் எந்தத் தொடர்புமே இருக்கவில்லை. கங்காணிகள் என்று சொல்லப்படுகிறவர்களே "இடைத்தரகர்"களாக இருந்து இவர்களை அழைத்துச் சென்றதும், அங்கு"குட்டி ராஜா"க்களாக இருந்து ஆட்டிப் படைத்தும், வாங்கும் கூலியை அவர்களது கையிலேயே போட்டுவிடவேண்டும்; இவர்களது தேவைகளை அவர்களே வாங்கிக் கொடுப்பார்கள்; பிள்ளை பெற்ருல்கூட அந்தக் குழந்தைக்கு அவர்களே பேர் வைக்க வேண்டும்; பெண்கள் தேயிலை பறிக்கச் செல்லும்போது வளையல் அணியக்கூடாது இப்படிபட்ட கொடுமைகளுக்கு மத்தியிலே அங்கே தமது வாழ்க்கையை ஆரம்பித்தார்கள். 1930க்குப் பின் இந்த 'ஆட்சிக்கு' முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

## இலங்கைப் பொருளாதாரம்

இலங்கையில் பொருளாதாரத்தில் முதுகெலும்பாக இருப்பவர்கள் மலையகத் தமிழ் தொழிலாளர்கள். இலங்கையில் காப்பித் தோட்டச் செய்கை ஒரு வகை நோயினுல் அழிந்ததைத் தொடர்ந்து அந்த இடத்தை தேயிலையும், ரப்பரும் பிடித்துக் கொண்டன. தேயிலைத் தோட்டங்களில் 90 ·. இவர்களே தொழிலாளர்கள். ரப்பர் தோட்டங்களில் 7 ·. இவர்களேதான். 1952-ல் 5, 67, 000 ஏக்கர் தேயிலை பயிராயிற்று. அந்த ஆண்-

டில் 7230 லட்சம் ரூபாய் பெறுமதியான 3140 லட்சம் இருத்தல் தேயிலையும் 3630 லட்சம் ரூபாய் பெறுமதி யான 206, 244. 000 இருத்தல் ரப்பரும் ஏற்றுமதியா யின என்பது குறிப்பிடத் தக்கது. இந்தளவிற்குப் பொரு ளாதாரத்திற்கு மூழுமூச்சாக இருக்கும் 'மலையகத் தமி ழர் வாழ்வு......?'

## இந்திய மக்களாகவே இன்னல்களுக்கு மத்தியில்

தேயிலை, ரப்பர் தோட்டங்களில் வாழும் மலைய கத் தமிழ் தொழிலாளர்களைப் பொருத்தவரை பல சட் டங்கள் இயற்றப் பட்டன. திருத்தங்கள் கொண்டு வரப் பட்டன. ஆயினும் இவர்கள் 'இலங்கை- இந்தியத் தொழிலாளர்' களாகவே கருதப்பட்டு வந்தார்கள்.

முதலில் 'கிராம சபை' அமைக்கப்பட்டபோது தோட்டத் தொழிலாளர்கள் (இந்தியர்கள்) ஓட்டளிக்க அனுமதிக்கப்படவில்லை; அதே வேளையில் இவர்களின் பாதுகாப்பு, கல்வி, வீடு, சமத்துவ சகவாழ்வு வழங்க வும் இருநாட்டு அரசுகளுக்கிடையில் உடன்பாடானது. இதுவும் 1930 வரைதான் நீடித்தது. 1927ல் அமைக் கப்பட்ட 'டொனமூர் ஆணைக்குழு' அரசியல் நிர்ணய சட்டத்தைச் சீர்திருத்த சிபார்சு செய்தது இத்தருணத் தில், சிங்களத் தலைவர்கள்—சிங்கள மக்கள் தமிழ் தொழிலாளர்கள் மீது எதிர்ப்பைத் தெரிவித்தனர். இவ் வாணைக்குழு 1937ல் வயது வந்த எல்லோருக்கும்வாக் குரிமை வழங்கியது. 5 ஆண்டுகள் நாட்டில் தொடர்ந்து இருந்தாலே வாக்களிக்கத் தகுதியுடைவர்களாளார்கள் என அறிவித்தது. ஆனால் 1931 ஆர்டர் இன்கவுன்சில் ஸ்டேட் கவுன்சில் எலெக்ஷனுக்கு 8 ஆண்டுகள் வாழ்ந்

திருக்க வேண்டும் வருமானத்தைக் காட்ட வேண்டும்; நிரந்தரமாக 'செட்டில்மெண்ட்' ஆகி இருக்க வேண்டுமென்று கோரியது. இதை இந்திய அரசு எதிர்த்தது. சில மாற்று யோசனைகளை அறிவித்தது இதை சிங்களத் தலைவர்கள் தள்ளுபடி செய்யக்கேட்டுக் கொண்டனர். தமிழ் தொழிலாளர்களாலும் சான்றிதழ் வழங்க முடியவில்லை. 1931ல் ஆர்டர் இன் கவுன்சில்படி 25,000 பேர் மட்டுமே வாக்காளராகப் பதிந்திருந்தனர். இதற்குச் சிங்கள மந்திரிகள் கவர்னரிடம் புகார் செய்தனர். 1943ல் இத்தொகை 1,68,000 பேராகக் குறைந்தது, பின் அது 57,000 ஆக ஆனது.

இதற்கிடையில் சிங்களத் தலைவர்கள் தமிழ் தொழிலாளர்களுக்கு அதாவது இந்தியருக்கு எதிராகப் பிரச்சாரம் செய்து வந்தனர். இந்தியர்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென அன்றைய சிங்களத் தலைவர்களான, ஏ.ஈ. குணதிலக்க, எஸ். டபிள்யூ, ஆர். டி. பண்டாரநாயக்கா போன்றவர்கள் பேசிவந்தனர். 1936ல் எட்வேட் ஜேக்ஸன் (தனிநபர் ஆணைக்குழு) அதற்கு ஆதரவான கருத்தைத் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து 1930—33 க்கிடையில் அரசு ஊழியராக இருந்த இந்தியர்கள், 9000 பேர் வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டனர். 1939யில் அரசுத்துறைகளில் நாட்கூலிகளாக பணி செய்த தொழிலாளர்கள் நீக்கப்பட்டனர். 1935ல் அரசு நிலம் வாங்கவும் தடை விதித்தது. மீன் பிடிக்கக் கூடாது போன்ற சட்டங்கள் எல்லாம் கொண்டு வரப்பட்டன.

1939இல் இந்திய அரசு அன் ஸ்கில்ட் தொழிலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுத்து நிறுத்தியது. இதனால் தோட்டத் தொழிலுக்கு தொழிலாளர் தட்டுப்பாடு ஏற்பட்டதால் 1944ல் எச். ஜெ.

ஹக்ஸன். எம். ஜி. சி. சிரியா என்போர்கள் டெல்லி சென்று இதை தளர்த்தும்படி வேண்டுகோள்விடுத்தனர்

சிங்களத் தலைவர்களின் பிரச்சாரத்தாலும், சிங்கள மக்களின் துவேஷத்தாலும் தமிழ் தொழிலாளர்கள் உரிமைகள் மறுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு வந்தார்கள்.

## குடியுரிமைச் சட்டம் நாடற்றவர்களாக்கியது

சுதந்திர இலங்கையின் முதலாவது நாடாளுமன்ற தேர்தல் 1947-48ல் நடந்தது. இத்தேர்தல் மலையகத் தமிழர்களாகிய இந்தியத்தமிழர்களும் வாக்களிக்க டொனமூர் ஆணைக் குழுவின் அரசியல் நிர்ணயச் சட்டம் அந்தஸ்து அளித்தது. அந்த உரிமையோடு மலையகத் தமிழர் தமது சார்பில் (இலங்கை இந்திய காங்கிரஸ் என்ற அமைப்பின் கீழ்) 7 இடங்களைப் பெற்றனர்,

இந்த வெற்றி நிரந்தரமானதாக இருக்கவில்லை. இந்த வெற்றி மூலம் மலையக மக்கள் இடதுசாரிகளின் கரத்தைப் பலப்படுத்தினர். இதனால் வடது சாரி அணியின் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் டி. எஸ். சேனநாயக்க தனிப்பெரும் வெற்றி கிட்ட வாய்ப்பில்லாது போய் விட்டது இந்தத் தேர்தல் மூலம் இந்தியத் தமிழர் எதிர்ப்பும் வேரூன்றத் தொடங்கியது

1948–ல் முதலாவது 'சுதந்திர இலங்கையின் பாராளுமன்றம் குடியுரிமைச் சட்டத்தை நிறைவேற்றியது இந்தச் சட்டம் நிறைவேற்றுவதற்கு முன், 1941ல் டி. எஸ். சேனநாயக்கா இலங்கை-இந்திய குடியுரிமை மசோதா ஒன்றைக் கொண்டு வந்தார். இது தொடர்பாக நேருவும் சேனநாயக்காவும் சந்தித்துப் பேசினர். கடிதங்கள் மூலமும் விவாதித்தார்கள். ஆனால் நேரு

வின் சில கருத்துக்களை யோசனைகளை சேனநாயக்கா ஏற்க மறுத்தார். அதனுல் பேச்சு வார்த்தை முறிந்தது.

'இலங்கைக் குடியாகும் இந்தியர்களின் எண்ணிக்கையை பூஜ்யமாக்குவதே' எனது குறிக்கோள்' என்று கருத்துக் கொண்டிருந்த சேனநாயக்காவைப் பொறுத்தவரை, எல்லாம் கண்துடைப்பாகவே இருந்தது,

1949-ம் ஆண்டு இந்திய-பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டம் வந்தது. இது இலங்கைக் குடியுரிமைக்கான மனுவைப்பெற 2 வருட அவகாசம் அளித்தது, 8,25,000 பேர்களின் சார்பாக 2,37,000 மனுக்கள் அனுப்பப்பட்டன. இச்சம்பவம் இலங்கையில் குடியேறியவர்கள் இலங்கையைத் தங்கள் நாடாக ஏற்றுக் கொண்டதை நிரூபித்தது.

1962-ம் ஆண்டு வரை இந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுச்செய்த 1,34!000 பேர்களில் 16.2 வீதத்தினர்க்கு மட்டுமே இலங்கைப் பிரஜா உரிமை வழங்கப்பட்டது. 1950யிலிருந்து 1964 வரை இந்திய 2,25,000 பேர்களை இந்தியக் குடியாக ஏற்றுக் கொண்டது இருநாடுகளினுலும் குடியுரிமை வழங்கப் படாதவர்கள் நாடற்றவர்களாக்கப் பட்டார்கள்.

1964க்கு முன்னர் நாடற்றவர்கள் பிரசினை குறித்து மூன்றுமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

1953ல் இது தொடர்பாக லண்டனில் நேரு—டட்லி சேனுநாயக்க பேச்சுவார்த்தை நடைபெற்றது. 1954ல் நேரு கொத்தலாவலை ஒப்பந்தம் டில்லியில் கைச்சாத்திடப்பட்டது. அதில் மிகச்சிலரே இலங்கை குடியுரிமை பெற்ருர்கள். இவர்களுக்கிடையே 1962ல் டில்லியில் பேச்சுவார்த்தைநடந்தது. இருஅரசுகளினுலும் சரியானபடி முடிவுகாணப்படாததால் நாடற்றவர்களாகவே இருக்கும் நிலைக்கு மலையகத் தமிழர்கள் தள்ளப்பட்டார்கள்,

## உழைக்கும் சாதனமே உரிமையோ இல்லை

சுமார் 150 ஆண்டுகளாக பல தலைமுறைகள் இலங்கையிலே பிறந்து வளர்ந்து வாழ்ந்த மக்கள் நாடற்றவர்களாக்கப்பட்டார்கள். சுதந்திரத்திற்கு முன் அவர்கள் எங்கே வாழ்ந்தார்களோ, அந்த நாட்டில் குடியுரிமை பெற தகுதியுடையவர்கள் என்று மனித உரிமைகள் சாசனம் இருந்தும் அந்த உரிமைகள் பற்றிய சாசனங்கள் இருந்தும் இந்த உரிமைகள் இங்கே மறுக்கப்பட்டன.

1928ல் டொனமூர் ஆணைக்குழுவின் அறிக்கைப்படி 50% - 1938ல் ஜாக்ஸன் அறிக்கைப்படி 60% -1946ல் சோல்பரி ஆணைக்குழுவின் அறிக்கைப்படி 80%, இந்தியாவிலிருந்து வந்த தமிழ் மக்கள் நிரந்தரமாக இலங்கையில் குடியேறினர். அத்தனை காலம் வாழ்ந்தும். அந்த நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகித்தும் அவர்களுக்கு உரிமை வழங்க மறுக்கப்படுகிறது.

1964 ஒப்பந்தப்படி நாடு கடத்தப்பட்ட போது தேயிலை, ரப்பர், தோட்டங்களில் ஏற்பட்ட ஆயிரக்கணக்கான காலி இடங்களை நிரப்ப மீண்டும் அனுப்பப்பட்டவர்களைத் தவணை முறையில் வரவழைக்கலாமா (நாடாளுமன்றப் பேச்சு) என்று மட்டும் பேசும் அளவிற்கு இம்மக்களை வெறும் இயந்திரமாக உழைக்கும் சாதனமாகவே என்னும் நிலையிலேயே, இலங்கைப் பெரும்பான்மை சமூகத் தலைவர்களும் அரசும் இருக்கின்றனர்!

## தொழிற்சங்கப் போக்கும் உழைத்தவர் வாழ்வும்

மலையகத் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் மத்தி

யில் தொழிற்சங்கங்கள் தோன்றி 'சேவை'யும் செய்து வந்தன.

1920-ஆண்டு கால கட்டம் வரை தொழிற்சங்கங்களே தோன்ற முடியாதிருந்தன. 1926-லிருந்து 1928 வரை தோட்டத் தொழிலாளர்களின் தலைவராக கே. நடேச ஐயர் இருந்தார். நகர்ப்புறத் தொழிலாளர்களின் தலைவராக ஏ. ஈ, குணசிங்க குறிப்பிடத்தக்கவராக இருந்தார். கூட்டாகச் செயலாற்றிய இவர்களின் உறவு 1920-30க்கு இடையில் முறிந்தது. 1929-ல் இருந்து 1934 வரை நீடித்த பொருளாதார மந்தப்போக்கு தொழிலாளர் இயக்கங்களின் வளர்ச்சியை மழுக்கடிக்கத் தொடங்கியது.

1930 அளவில் சிங்களத்தலைவர்களினால் தலைமை தாங்கி வழிநடத்தப்பட்ட சமசமாஜக் கட்சியில் தொழிற்சங்க இயக்கம் தோட்டத்தொழிலாளர்களின்-பாட்டாளி வர்க்கத்தில் சக்தியை உணரத் தொடங்கியது அவர்களின் உடமைகளை வென்றெடுப்பதற்காக இயக்கங்களைக் கட்ட ஆரம்பித்தது, ஆனால் 2வது உலக யுத்தத்தால் இது தடைப்பட்டது சமசமாஜக் கட்சித் தலைவர்களும், தொழிற்சங்கவாதிகளும் நாட்டை விட்டு, ஓடித் தலைமறைவாக வேண்டிய சூழ்நிலைக்கு ஆளானார்கள். இந்த வேளையில் தான், இத்தொழிலாளர்களை ஒன்று திரட்டித் தொழிற்சங்க இயக்கப் பணியில் ஈடுபடுத்தும் வேலை இலங்கை—இந்தியர் காங்கிரஸுக்கு வந்து வாய்த்தது இதன் பெயரே இவர்கள் இலங்கைக்கு விசுவாசமற்றவர்கள் என்கிற சந்தேகத்தைச் சிங்களமக்கள் மத்தியில் தோற்றுவித்து பிறகு, அது தொழிலாளருக்கு ஊட்டிய உணர்வும் அவ்வாறே அமைந்தது. தொழிலாளர் வர்க்க உணர்வையோ இல்லை வாழும் நாட்டின்மீது விசுவாசம்

பற்றுதலையோ, தேசிய உணர்வையோ வளர்க்கத் தவறினர்.

இலங்கை இந்தியர் காங்கிரஸின் மறு அவதாரமாகத் தோன்றிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் போன்ற சக்தி வாய்ந்த தொழிற்சங்கங்கள் இவர்களின் அடிப்படைப் பிரச்சினையில், மனித உரிமைப் பிரச்சினையில் அக்கறை செலுத்தவே இல்லை. இவர்களின் எதிர்கால இருண்ட வாழ்வைப் பற்றிக் கவலைப்படவில்லை. தோட்டத் தொழிலில் அன்றாடம் ஏற்படும் பிரச்சினைகளை-,காம்பரா பிரச்சினை'—குடும்பத் தகராறு—சாமி கும்பிடும் பிரச்சினைகளைத் போன்றவற்றைத் தீர்த்து வைப்பதிலே தங்கள் காலந் தள்ளி வந்தனர். தொழிலாளர்களை முதலீடாக வைத்து வளமான வாழ்வுக்கு வழி தேடிக்கொண்டிருந்தன. நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருக்கும் இத் தொழிளாளர்களுக்கு மாதச் சம்பளத்தைக் கூட இது வரை பெற்றுக் கொடுக்க முடியவில்லை.

இதில் வேடிக்கை என்னவென்றால், ஆசியக் கண்டத்தில் மிகப் பெரிய தொழிற்சங்கம் இலங்கை மலையகத் தொழிலாளர்கள் அங்கம் வகிப்பதுதான். இவை தொழிலாளர்களுக்கு 'எந்தப் போராட்டத்தை'யும் நடத்தியதில்லை. தலைவர்களும் சிறை புகுந்தார்கள் என்று சொல்லக்கூடிய எந்தத் தியாகத்தைக்கூட செய்ததில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

தொழிலாளர்களின் வர்க்க உணர்வைத் தட்டி எழுப்பி, அவர்களின் விடுதலைக்காகவும் மனித உரிமைக்காகவும் போராட முனைந்த சங்கங்கள் கூட இவற்றின் சக்திக்கு முன் நிற்க முடியவில்லை.

ஆக, காலங்காலமாக இவர்கள் நம்பி இருந்த தொழிற்சங்கங்கள் இவர்களுக்கு அளித்த பரிசு 'நாடற்

றவர்கள்' என்ற பாதாளச் சாக்கடையில் தள்ளிவிட்டமைதான்.

## ஆபத்தான ஒப்பந்தம்

1964-ல் மீண்டும் ஒப்பந்தம் உருவானது. அது தான் சாஸ்திரி—ஸ்ரீமாவோ ஒப்பந்தம். டில்லியிலே கைச் சாத்திடப்பட்டது.

1964 வரை 'நாடற்றவர்'களாக இருந்த மலையகத் தமிழர் தொகை 9, 75,000 பேர். இவர்களில் 3,00,000 பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கவும், 5,25 000 பேருக்கு இந்தியக் குடியுரிமை வழங்கவும் ஒப்பந்தமானது. மிகுதியான 1,50,000 பேர்களின் பிரச்சினை தள்ளிப் போடப்பட்டது. இந்த மிகுதித் தொகையில் 75,000 பேருக்கு இலங்கையும், 75,000 பேருக்கு இந்தியாவுக்கு குடியுரிமை வழங்க, 1974இல் இந்தியப் பிரதமர் இந்திராவுக்கும், இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோவுக்கும் இடையில் ஒப்பந்தம் ஆனது.

இந்த ஒப்பந்தப்படி நிறைவேற்றப்படும் காலத்திலிருந்து 15 ஆண்டுகளில் இந்தியாவுக்குக் குடிப்பெயர்த்தப்பட வேண்டுமென்பதே தீர்மானம்.

ஆனல் 1981-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் தேதி வரை 4,96,954 பேருக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. இதில் இயற்கையாக அதிகரித்த 1,24,467 பேரும் அடங்குவர். இவர்களில் அந்தத் தேதி வரை இந்தியாவுக்கு குடிப் பெயர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 3,74,444 பேர்களாகும். இதில் இயற்கையாய் அதிகரித்த 91,144 பேரும் அடங்குவர். 2,10,687 பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. அதில் இயற்கையாய் அதிகரித்த 48,593 பேரும் அடங்குவர்.

ஒப்பந்தத்தின் போது நாடற்றவர்களாக இருந்தவர்கள் 9, 75, 000 மேர் ஆனுல் ம னு க் கள் கோராப்பட்ட போது 11 லட்சம் பேர் மனுச்செய்து கொண்டார்கள் அவர்களில் 4 லட்சம் பேர் இந்தியாவுக்கும், 7 லட்சம் பேர் இலங்கைக்கும் மனுச்செய்து கொண்டார்கள் ஆனுல் இது ஒப்பந்தத்தில் இருநாடுகளும் ஏற்றுக்கொள்ளச் சம்மதித்துள்ள தொகைக்கு மு ர ணை இருப்பதைக் கவனிக்கவேண்டும். இப்படிப்பல சிக்கல்கள் மிகுந்த ஒப்பந்தம் காலக்கெடுபடி நிறைவேறவில்லை என்பதோடு இன்னும்பல லட்சம் மக்கள் அங்கு 'நாடற்றவர்' என்ற முத்திரையோடு உரிமையின்றி வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள்.

## கட்டாய நாடு கடத்தல்

மனித உரிமைக்காக எத்தனையோ, உலகளாவச் சட்டங்கள், திட்டங்கள், அதைக்காக்கும் அமைப்புகள் இருந்தும் இந்த மக்கள் பிரச்சினை மனிதாபிமானக் கண் கொண்டு பார்க்க மறுக்கப்பட்டு வருகிறது.

சம்பந்தப்பட்ட மக்களின் வி ரு ப் பு வெறுப்புகளை அறியாமல் அவர்களின் சம்மதமின்றி, அவர்களின் பிரதிநிதித்துவம் இன்றியே இந்த ஒப்பந்தம் செ ய் து கொள்ளப்பட்டது.

எந்த நாடு என்று சம்மந்தப்பட்ட இந்த மக்கள் தீர்மானிப்பதற்கு முன்பே இரு அரசுகளும் 6 லட்சம், 3-3 4 லட்சம் என்ற தீர்மானித்துக் கொண்டதும், 7 பேருக்கு இந்திய உரிமை வழங்கி இ ந் தி ய ா வு க் கு அழைத்துக்கொண்ட பின் தான் (பின் இது 7 பேருக்குக் குடியுரிமை வழங்கிஞல் போதும் என தீர்மானிக்கப்பட்டது)- 4 பேருக்கு இலங்கை அரசு குடியுரிமை வழங்கும் என்று தீர்மானித்துக்கொண்டதும், இன்னும் இது

போன்ற பல முரண்பாடுகள் இம்மக்களை கட்டாயமாக நாடு கடத்தப்படும் நிலைக்குத் தள்ளியது.

இலங்கை அரசைப் பொறுத்தவரை இந்த ஒப்பந்தம் வெறும் கண்துடைப்புத்தான்! தமிழர்கள் மீது கொண்ட இனப்பகை, வெறி;. எப்படியும் எந்தவகையிலேனும் இவர்கள் அனைவரையும் நாட்டைவிட்டு ஓடச் செய்வது தான்.

இந்த ஒப்பந்தங்கள் மூலம் மட்டுமல்ல; இந்த ஒப்பந்தத்தின்படி இலங்கைக்கு மனுச் செய்து கொண்டவர்களை நிராகரிப்பது, தேயிலை, ரப்பர் தோட்டங்களைச் சுவிகரித்துச் சிங்களவர்களைக் குடியேற்றங்களை ஏற்படுத்துவது மாற்றுப் பயிர்ச்செய்கைத்திட்டங்களை உருவாக்கி பெருந் தோட்டங்களை அழித்து, வேலை இழக்கச் செய்வது தொழிலாளர்களின் உயிருக்கும் உடமைகளுக்கும் சேதம் ஏற்படுத்தும் வகையில் இனக்கவரங்களுக்கு ஆதரவு கொடுப்பது போன்ற செயல்கள் மூலமும் இலங்கையை விட்டு குடிப்பெயர வைக்கும் பிரயத்தனங்களைச் செய்து வருகிறது என்பது குறிப்படத்தக்கது.

## அங்கும் இங்கும் அல்லல் வாழ்வே

இங்கு வந்தோர் நிலை அதற்கு மாருக இருக்கிறது' உரிமையற்ற நிலையில் அங்கு வாழ்ந்த வாழ்க்கையைக் கூட உரிமையுடன் வாழ வந்த இங்கே இழந்து விட்டார்கள்,

பிறந்து வளர்ந்து வாழ்ந்துவந்த மண்ணை. மக்களை, சமூகத்தை, தொழிலை, பழக்க வழக்கங்களையெல்லாம் துறந்து மறந்து இங்கே வந்து புதுவகை வாழ்க்கையை அனுபவிக்கும் நிலைக்கு ஆளாகி விட்டார்கள்.

இந்த நாட்டில் பழக்கப்படாத சீதோஷ்ண நிலை. சமூக முறை, தொழில் முறை, பொருளாதாரச் சூழ்நிலை யில் தாக்குப்பிடிக்க முடியாத மக்களாக பொருளாதார பாதிப்புக்கு மட்டுமல்ல மனோநிலை பாதிப்புக்கும் ஆளாகி விட்டார்கள். இந்த பாதிப்புகளினால் வந்தவர்களில் 25 % மரணமடைந்து விட்டார்கள். மிகுந்தவர்களும் நடைப்பிணங்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அங்கும் இங்குமாக இலங்கையில் குடியுரிமையற்று நாடற்றவர்களாகவும் ஒப்பந்தத்தின் மூலமும் இந்தியா வுக்கு குடிபெயர்த்தப்பட்டு வாழ்கிறவர்களாகவும் இருக் கின்ற இந்த 'இலங்கை மலையகத்தமிழர்' வாழ்வு பிரச் சினைகள் மலிந்ததாகவும்-துயரம் மிகுந்ததாகவும் இருக் கிறது.

சிங்களவர்களின் துவேஷம், அடக்குமுறை இனக் கொடுமைகளுக்கு மத்தியில் உரிமையற்று வாழ்வதை விட இந்தியாவுக்கே சென்று வாழலாம் என்று இலங் கையிலே இருக்கும் மக்கள் எண்ணி வாடும் நிலையில் அங்கு இருக்கிறார்கள்.

தாய்நாடு என்று வந்து இது நாய்நாடாக இருக் கிறது. இங்கு 'சிலோன்காரன்' என்ற பட்டத்தில் ஏளனத்தோடும், வாழ வழியில்லாது துன்பம் துயரத் தோடும் சாவதை விட அங்கேயே சிங்களவர்கள்கொடு மைப்பட்டுச்செத்து இருக்கலாம் என்று ஒப்பந்தத்தின் கீழ் குடிபெயர்ந்து வந்தவர்கள் எண்ணிவாடும் நிலையில் இங்கு இருக்கிறார்கள்.

## மீண்டும் ஒப்பந்தம் மீட்சிக்கு வழி என்ன?

தொடர்ந்து நாடற்ற மக்களாக இருக்கும் மலைய கத் தமிழ் மக்கள் சம்பந்தமாக மீண்டும் ஒரு ஒப்பந்

த்தை அல்லது 1964, 1974 ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்பட்டுக் கொள்ள இலங்கை அரசு முயன்று வருகிறது இந்திய அரசின் சில அமைச்சர்களும் மீண்டும் முடிவு செய்யப்படும் என்று கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

அப்படி ஒரு ஒப்பந்தம் இனியும் கூடாது அப்படியே செய்யப்படுமானாலும் இலங்கை அரசு அவர்களை நாடு கடத்துவதை ஏற்றுக்கொள்ளக் கூடாது இந்திய அரசும் அதற்கேற்ப குடியுரிமை வழங்கக் கூடாது என்பது சம்பந்தப்பட்ட மக்களின், அவர்களைச்சார்ந்தவர்களின் மனித உரிமை இயக்கங்களின்-மனித நேயத்தை விரும்பும் அனைவரது ஏகோபித்த கருத்தும் முடிவுமாகும்,

மலையகத் தமிழ் மக்களின் 'நாடற்றவர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதோடு மட்டுமல்ல; அவர்களது வாழ்வுக்கும் அங்கே பாதுகாப்பும் உரிமைகளும் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

இன்றைக்கு மலையகத் தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்து நாட்டை விட்டு ஓட்ட இலங்கை அரசு முயற்சிப்பதோடு மட்டுமல்ல இலங்கை மலையகத் தமிழர் உட்பட) வடகிழக்கில் வாழும் பூர்வீகத் தமிழர்கள் அனைவரது உரிமைகளையும் கொஞ்சம் கொஞ்சமாகப் பறித்து வருவதோடு பேரினவாதத்தையும் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. இதற்கும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அப்போது தான் மலையகத்தமிழர்களின் எதிர்கால வாழ்வு சுபீட்சமடைய முடியும் என்பதோடு இலங்கையிலுள்ள அனைத்துத் தமிழ் மக்கள் மட்டுமல்ல; சிறுபான்மை இனங்களும் சமாதான சகவாழ்வோடு வாழ முடியும்.

———

# வாசிக்கிறீர்களா ?

## நலிவுற்றோர் நல ஏடு!
## நாடு குடிபெயர்ந்தோர்
## எழுச்சி ஏடு!

செய்திகள்
தகவல்கள்
கட்டுரைகள்
கதை, கவிதைகள்
தாங்கி
வெளிவருகிறது

| | | |
|---|---|---|
| ஆண்டு சந்தா | ரூ. | 10—00 |
| அரையாண்டுச் சந்தா | ரூ. | 5—00 |

விபரங்களுக்கு

**மக்கள்**
**மறுவாழ்வு**

31, கங்கையம்மன் கோயில் வீதி,
சென்னை-600 094.


காளிதாஸ் பிரஸ், சென்னை-24.